தமிழ்ச் சிட்டு



தம்பி! உனக்கொரு செய்தி சொல்வேன்!

(1)

தம்பி! உனக்கொரு
செய்தி சொல்வேன்—தமிழ்த்
தாயைக் குறித்தொரு
கொள்கை சொல்வேன்!
வெம்பி வதங்கியே
வாடுகின்றாள்!—அவள்
வீரரை எங்கணும்
தேடுகின்றாள்!

(2)

தனக்கென ஆட்சித்
தகுதியில்லை—அவள்
தாளைப் பிடித்தார்க்கும்
மீட்சியில்லை!
மினுக்கும் கவர்ச்சியும்
மிக்குடைய—பல
மிடுக்கு மொழிகளால்
சாம்புகின்றாள்!

(3)

இந்திக்கும் ஆங்கில
மொழியினுக்கும்—தமிழ்
இளைஞர் தருகின்ற
மதிப்பினைப்போல்,
சிந்திக்கும் ஆற்றலைத்
திறம் மிகுக்கும்—நம்மின்
செந்தமிழ்த் தாய்க்குத்
தருவதில்லை!

(4)

இந்த நினைவினால்
வாடுகின்றாள்!—உளம்
ஏங்கியே நம்துணை
நாடுகின்றாள்!
வந்து நம் அணியினில்
சேர்ந்துகொள்வீர்—தமிழ்
வாழ்கவே வாழ்கென
ஆர்த்து செல்வீர்!

ரல் : 20
சை : 12

விலை :
உருபா : 1-00

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

முத்துமொழிகள்

- பெரியவர்களாய்ப் பிறப்பவர் சிலர். பெருமையைத் தேடிக் கொள்பவர் சிலர். சிலரிடம் பெருமை பிறரால் திணிக்கப்படுகிறது.
- நல்ல செயல்களை நாமாகத் தேடிச் செய்ய வேண்டும். அவை நம்மை நாடி வாரா.
- வாழ்க்கையை நேசிப்பவர்களாக இருந்தால் நேரத்தை வீணாக்காதீர்கள். ஏனென்றால் வாழ்க்கை நேரத்தால் ஆனது.
- நம்முடைய செயல்களே நாம் எப்படிப்பட்டவர் என்பதைப் பிறருக்கு உணர்த்தும்.
- பயன்படுத்தும் போதுதான் உடலும் உள்ளமும் உயிரும் வலிமை பெற்று வளர்கின்றன.
- மன நிறைவைப் போன்ற நலமும், ஒழுக்கத்தைப் போன்ற அணிகலமும், உடல் நலத்தைப் போன்ற பேறும் உலகில் வேறெதுவும் இல்லை.
- செல்வத்தை வைத்துச் சென்ற தகப்பனைவிடத் தொழில் கற்பித்துச் சென்ற தகப்பனே தன் மக்களுக்கு மிகுந்த காப்பு அளித்தவன்.
- கடுமையாக உழை. அளவோடு விளையாடு. பிறர் உன்னைப் பற்றி என்ன சொன்னாலும் கவலைப்படாதே. யாருக்கும் கேடு செய்யாதே. எது பற்றியும் சினம் கொள்ளாதே. வாழ்விலே நிறைவு அடை. இதுவே வாழும் வழி.
- முதுமை அகவையைப் பொறுத்தது அன்று. உணர்ச்சியைப் பொறுத்தது.
- பழங்கள் நிறைந்த மரம் எப்பொழுதும் கனத்தினால் தாழ்ந்து வளையும். நீ பெருமை பெற விரும்பினால் அடக்கத்தோடும் பணிவோடும் இரு.
- உள்ளத்தில் அன்பு இருந்தால் மட்டும் போதாது. அது செயலில் வெளிப்பட வேண்டும்.
- ஆடம்பரம் இல்லாத எளிய வாழ்வும், அகந்தை யில்லாத நடத்தையும்தான் ஒவ்வொருவருக்கும் சிறந்தது. அஃது உடலுக்கும் உள்ளத்துக்கும் நல்லது.
- உண்மைக்காக எதையும் ஈகம் செய்யலாம்; ஆனால், எதற்காவும் உண்மையை ஈகம் செய்யக் கூடாது.
- போதுமான அளவில் செல்வம் இருந்தால் அஃது உன்னைத் தூக்கிச் செல்லும். மிகுதியாகிவிட்டால் நீதான் அதைத் தூக்கிச் செல்ல வேண்டும்.
- கட்டுப்பாடற்ற பேச்சுதான் பல தொல்லைகளுக்குக் காரணம். வாயை அடக்கக் கற்றுக் கொள்வதே வாழ்வில் வளம்பெற வழி.
- நினைத்ததை எல்லாம் பேசாதே. நினைத்துப் பேசு.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல். 20] (தி.பி-2021) மீனம் (மார்ச்-ஏப்ரல் 90') [இசை-12

ஒள்ளறிவும் காரறிவும்!

திருவள்ளுவப் பேராசான் வெளிப்படுத்திய எத்தனையோ நுண்பொருள் உண்மைகளுள், அவரால் கண்டு காட்டப் பெற்ற அறிவு வகைகள் பெரிதும் வியக்கத்தக்கனவாகும். சுருக்கமாகச் சொல்வதானால் மாந்தனின் மனத்தையும் நோக்கத்தையும் உயர்த்துகின்ற – மேலோங்கச் செய்கின்ற ஒவ்வோருணர்வும் ஒவ்வோர் அறிவே! அவனைத் தாழ்த்துகின்ற—கீழிறங்கச் செய்கின்ற ஒவ்வோருணர்வும் ஒவ்வோர் அறியாமையே!

அறிவு, அதனைப் பெற்றவனுக்கும் அவனைச் சூழ்ந்திருப்பவர்களுக்கும் விழிப்புணர்வைத் தந்து, அவனை மகிழ்வாகவும் நிறைவாகவும் இருக்கும்படி செய்யும்.

அறியாமை, அதனைக் கொண்டவனுக்கும் அவனைச் சூழ்ந்திருப்பவர்களுக்கும் அழிவுணர்வைத் தந்து, அவனைத் துன்பத்திலும்; நிறைவற்ற தன்மையிலும் இருக்கும்படி செய்யும்.

அறிவு, அதனைப் பெற்றவனுக்கும், அவனைச் சுற்றியிருப்பவர்க்கும் நன்மையைத் தரும்.

அறியாமை, அதனைக் கொண்வனுக்கும், அவனைச் சுற்றியிருப்பவர்க்கும் தீமையைத் தரும்.

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்.
ஆசிரியர்: மா. பொழிலன்.
தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்)

அறிவு, ஒருவனை உயர்த்தும்; அறியாமை ஒருவனைத் தாழ்த்தும்.

இவ்வுண்மைகளையெல்லாம் ஆழமாகவும் அகலமாகவும் திருவள்ளுவப் பேராசான், தம் அரிய நூலாகிய திருக்குறளில் மிக விரிவாகவும் விளக்கமாகவும எடுத்துரைக்கின்றார்.

அறிவு வாலறிவை (மெய்யறிவை) உணர்த்தும். (2); அறிவினாலேயே மனவுணர்வின் நடுவு நிலையை உணரமுடியும் (116); அறிவே அடக்கத்தைக் கொடுக்கும் (123); அதுவே உலகத்தோடு இயைபு கொண்டு வாழ்வதைக் கற்பிக்கும் (140); அறிவே பேராசையைக் கட்டுப்படுத்தும் (175); அறிவுடையார் எப்பொழுதும் பயனற்ற சொற்களைச் சொல்லார் (198); அவர் எப்பொழுதும் தம் பகைவர்களுக்கும் தீமையைச் செய்யார் (203); அறிவுள்ளவர் தம் தேவையைப் போல், மற்றவர் தேவைகளையும் உணர்வார் (214); அறிவுடையார் கைகளில் கிடைத்த பொருள், ஊர்க்கிணறு நிறைந்ததைப் போல், அனைவர்க்கும் பயன்படும் (215); அறிவுள்ளவர் உயிர் குலத்துக்கே பயனுடையவராக இருப்பர் (68); அன்னவர்கள் ஒருவருடன் இணைகின்ற பொழுது மகிழ்வாயிருக்கும்; பிரியும் போது துன்பமாக இருக்கும் (394); அறிவுள்ளவர் கற்கும் பொழுது ஆசிரியரிடம் பணிந்திருந்து கற்றுக் கொள்வர். (395); அவர்கள் பிறர் மகிழ்வதைக் கண்டு தாமும் மகிழ்வர் (399). தாம் கற்கும் கல்வியையே பிற செல்வங்கள் யாவினும் உயர்வாகக் கருதுவர் (400); நாச்சுவையைவிட அறிவுச் சுவையையே மிகுதியாக விரும்புவர் (412); அவர்கள் எப்பொழுதும் மிகுதியாகப் பேச மாட்டார்கள் (419); அவர்கள் பிறர் செய்யும் கேடுகளிலிருந்து தம்மை என்றும் காத்துக் கொள்வர்; அதனால் எதிரிகளுக்கும்கூட இவர்களை அழிப்பது கடினம் (421); அவர் எப்பொழுதும் தீமைகளை நாடாமல் நல்லவற்றையே நாடுவர் (422).

எந்தப் பொருளையும் பேச்சையும் அப்படியப்படியே பார்க்காமல், கேட்காமல், அவற்றை ஆய்ந்து பார்த்து உண்மையறியவே அறிவுள்ளவர்கள் விரும்புவர் (422) (355); அத்தகையவர்கள் பேசும் பொழுது எளியவர்களுக்கும் விளங்குமாறு பேசுவார்கள்; பிறர் கூறுவது தெளிவில்லாமல் இருந்தாலும் எளிதில் விளங்கிக் கொள்ளவும் செய்வார்கள் (424); அவர்கள் எப்பொழுதும் உலகத்தைத் தழுவியே நடந்து கொள்வார்கள்; எதற்கும் எளிதே உணர்வு வயப்படவும் மாட்டார்கள்; சோம்பி அமர்ந்துவிடவும் மாட்டார்கள் (425); உலகம் எப்படி இருக்கின்றதோ அதற்குத் தக்கபடி இணைந்து இருக்கக் கற்றவர்கள், அவர்கள் (426): இவர்கள் எப்பொழுதும் எதிர்காலத்தில் வரும் விளைவுகளை முன் கூட்டியே உணர்ந்து கொள்வார்கள். (427); அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சுவார்கள், இவர்கள் (428); ஒரு செயலால், அல்லது சொல்லால் பின்னர் என்னென்ன விளைவு வரும் என்பதை, அறிவுள்ளவர்கள் முன் கூட்டியே அறிந்து

கொள்வார்கள். ஆகையால், பின்னர் வரும் எதனாலும் அவர்கள் துன்பப்படுவது இல்லை. (429); இவர்கள் தம் அறிவாற்றலால் எதையும் விளைவித்துக் கொள்வார்கள் (430). பின்னர் வரும் ஊதியத்தைக் கருதி, இக்கால் கையில் உள்ள முதலை, அறிவுள்ளவர்கள் இழந்துவிடும் செயலைச் செய்ய ஊக்கம் தர மாட்டார்கள். (463); வெள்ளம் போல் பெருகி வரும் துன்பம் கூட அறிவுடையவர்கள் தம் உள்ளத்தால் எண்ணியமட்டிலேயே இல்லாமற் போய் விடும் (622); அறிவுள்ளவருடைய நட்பு வளர்பிறை போல் வளருந் தன்மையது. (782);—என்பன போன்ற மிக நுட்பமான உண்மைகளை அறிவுக்கும் அறிவுள்ளவர்க்கும் இயைபாகக் கூறியுள்ளார், நம் திருவள்ளுவப் பேராசான்.

அதே போல். அறியாமைக்கும் அவ்வறியாமை உள்ளவர்க்கும் அவர் தரும் விளக்கக் கருத்துகள் அறிவு வேட்கை கொண்ட இளைஞர்களால் நன்கு கவனிக்கப் பெறுதலும் உளத்தில் பதிக்கப் பெறுதலும் வேண்டும். அவை வருமாறு:

அறிவில்லாதவர்களுக்கு வெட்கம் இராது; அறிவு பெற வேண்டும் என்னும் நாட்டம் இராது; பிறர்மேல் உண்மை அன்பு இராது; தம் பெருமை நலன்களைப் பேணிக் கொள்ளவேண்டும் என்னும் எண்ணம் இராது. (833); அவர்கள் துன்பங்களையும் இழப்புகளையும் ஏற்றுக் கொண்டு, இன்பங்களையும் ஊதியங்களையும் தவறவிட்டு விடுவார்கள் (831); அவர்கள் சில நேரங்களில் கல்வி கற்றிருந்தாலும், அதைப் பிறர்க்கு எடுத்துச் சொல்பவர்களாக இருந்தாலும், அவற்றின்படி தாம் நடக்க மாட்டார்கள். (834); அவர்கள் ஏதாவது ஒரு செயலைச் செய்தாலும் அதில் பொய்ம்மை இருக்கும்; போலியான ஆரவாரமும் இருக்கும்; அதை எவ்வாறு செய்து முடிப்பது என்பதும் அவர்களுக்குத் தெரியாது. (836); அவர்களிடத்தில் ஏதோ ஒரு வகையில் ஏதோ ஓர் அளவில் பொருள் வந்து சேரின்; ஏற்கனவே பித்துப் பிடித்த ஒருவன் கள் குடித்தது போல் தலைகால் தெரியாமல் ஆட்டம் போடுவார்கள்: (838); அவர்களின் நட்பு ஒரு வகையில் நல்லது; ஏனெனில் உண்மையான நண்பர்கள் பிரியும் பொழுது வருந்துவதைப் போல், அவர்களின் பிரிவு வருத்தத்தைத் தருவதில்லை. (839); அறிவில்லாதவர்கள் விருந்தோம்புதலை விரும்ப மாட்டார்கள்: (89); இவர்கள் உலகில் நிலையில்லாத பொருள்களை நிலையானவையே என்று எண்ணிச் செயல்படுவார்கள் (331); தேவையான நூல்களைப் படிக்காமலேயே, இவர்கள், நிறைய அவை பற்றிப் பேசுவார்கள் (401); அதேபோல், இவர்கள் கல்லாதவரின் அறிவற்ற சொற்களையே விரும்பிக் கேட்பார்கள் (402); இவர்கள், இருக்கிறார்கள் என்று சொல்லும்படி இருப்பார்களே தவிர, இவர்களால் பிறர்க்கு ஒரு பயனுமிராது; எந்த விளைச்சலும் இல்லாத களர் நிலத்தைப் போன்றவர்கள் (406); அறிவுக்கூர்மை இல்லாத இவர்கள் அழகான பொம்மையைப் போல் உலா வருவார்கள் (407); இவர்கள் விலங்கினங்களைப் போன்ற-

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

அன்பர்கள் கவனிக்க:
(16-ஆம் பக்கத்தில் உள்ள, 'வல்லினம் மிகுதலும் மிகாமையும்' கட்டுரையின் தொடர்ச்சி இது. அதை முன்னதாகப் படித்து விட்டுப் பின்னர் இதைப் படிக்கவும்.)

'யாண்டுச் சென்றாய்' என்னும் தொடரில் யாண்டு என்னும் வினைப் பெயரைத் தொடர்ந்து சென்றாய் என்னும் சொல்லைச் சேர்க்கும் பொழுது இடையில் வல்லினம் மிகும்.

(எ-டு) எப்பொருள்? — எப்படிப் பாடினரோ?
எந்தச் சிலம்பு? — எற்றைக் காலை?
எங்குத் தங்கலாம்? — எவ்வகைப் பள்ளி?
யாங்குக் கண்டாய்? — எத்துணைத் துன்பம்!
யாண்டுக் குடியிருப்பு? — யாப் பெரியன?

31. ஓரெழுத்து ஒரு மொழியின் பின் வல்லெழுத்து மிகும்:

'தீ' என்பது ஓர் எழுத்தாக இருந்தாலும், 'நெருப்பு' என்று பொருள் தருகின்றமையால் அது சொல்லாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு ஓர் எழுத்தே ஒரு சொல்லாக அமைந்துள்ள எழுத்துகளெல்லாம் ஓரெழுத்தொருமொழி என்று வழங்கப்பெறுகிறது.

இந்த ஓரெழுத்தொருமொழிகளின் பின் வல்லெழுத்துகள் மிகும்:

(எ-டு) ஈக்காடு — சேக்கிழார்
ஏச் சென்றது—(மேலே சென்றது)
காப் போல—(காட்டைப் போல)
நாப் பழக்கம் — கோச்சேரன்.

32. குறிலைத் தொடர்ந்து ஆகார நெடில் வரும் ஈரெழுத்தொரு மொழியின் பின் வல்லினம் மிகும்:

கனா, பலா, விழா என்னும் சொற்கள் ஈரெழுத்து ஒரு மொழிச் சொற்கள் எனப்பெறும்.

இவற்றுள் இரண்டு எழுத்துகளிலும் முன்னுள்ள எழுத்து குற்றெழுத்து (குறில்) ஆகவும், பின்னுள்ள எழுத்து ஆகார நெட்டெழுத்து (நெடில்) ஆகவும் உள்ளன.

'கனா' என்னும் சொல்லுடன் 'கண்டேன்' என்னும் சொல் சேரும் பொழுது வல்லெழுத்து மிகுந்துள்ளது.

எனவே, குறிலைத் தொடர்ந்து ஆகார நெடில் வரும் ஈரெழுத்தொரு மொழியின் பின் வல்லினம் மிகும்.

(எ-டு) விழாக் கண்டார் — இராப் பகல்
உலாப் போனார் — வினாத் தொடுத்தார்
பலாத் தின்றான் — களாச் சார்ந்தது.

33. குறிலிணை மொழிகளில் வரும் முற்றுகரத்தின் பின் வலி மிகும்:

இரண்டு குறில் எழுத்துகள் இணைந்து ஒரு சொல்லாக வருவது குறிலிணை மொழி எனப் பெறும்;

கொசு என்பது ஒரு குறிலிணைச் சொல்.

இக் குறிலிணைச் சொல்லில் இறுதியெழுத்து (பின்னெழுத்து) 'உகரம்' ஏறிய உயிர்மெய் எழுத்தாக உள்ளது.

தனிக் குற்றெழுத்தை யடுத்து உகர உயிர்மெய் (கு, சு, டு, து, பு, று) எது வரினும், அது முற்றுகரச் சொல்லே; (முற்றியலுகரமே.)

'கொசு' என்னும் சொல்லையடுத்து 'கடித்தது' என்னும் வருமொழி நோக்கி வல்லெழுத்து மிகுந்துள்ளது.

இவ்வாறு குறிலிணை மொழிகளில் வரும் முற்றியலுகரத்தின் பின் வலி மிகும்.

(எ-டு) உடுச் சிதறியது (உடு-விண்மீன்)

மருத் தூர்ந்தது	வடுத் தீர்ந்தது
கணுத் தோன்றியது	அணுப் பிளந்தது.

34. பெயரெச்சத்தின் பின் வல்லெழுத்து மிகாது:

'ஆடிய பாதம்' என்னும் தொடரில், 'ஆடிய' என்பது வினைச்சொல். ஆடியவன், ஆடியவள் என்பவற்றைப் போல் இச்சொல் முற்றுப் பெறுமல் குறைபட நிற்றலால் இ'து எச்சவினையாகும்.

'பாதம்' என்பது பெயர்ச்சொல். ஆடிய என்னும் எச்சவினை, பாதம் என்னும் பெயரைத் தழுவுகின்றது; ஆகவே ஆடிய என்பது பெயரெச்ச வினையாகும்.

'ஆடிய பாதம்' என்பதில் வல்லெழுத்து மிகவில்லை.

எனவே, பெயரெச்சத்தின் பின் வல்லெழுத்து மிகாது.

(எ-டு)

ஓடிய குதிரை	உறங்கிய சிறுவன்
படிக்கிற பையன்	எடுப்பான தோற்றம்
நல்ல பாம்பு	கரிய குதிரை
இன்றைய செய்தி	வராத பையன்.

35. அற்றைச் செய்தி, பண்டைப் பெருமை என்பன போல ஐகார ஈற்றுச் சொற்களில் வலி மிகும்:

(எ-டு)

பிற்றைக் காலம்	முன்னைப் பெருமை
பின்றைக் காலம்	இற்றைப் பண்பாடு
முந்தைச் சான்றோர்	இன்றைக் கலை.

36. சில, பல என்னும் சொற்களின் பின் வலி மிகாது:

(எ-டு)

சில சொற்கள்	சில பக்கங்கள்
பல பாக்கள்	பல சட்டங்கள்

37. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லெழுத்து மிகும்:

'சென்றான்' என்பது போல, ஒரு செயலின் நிகழ்நிலையைக் குறிப்பது உடன்பாட்டு வினை.

'சென்றிலன்' என்பது போல, ஒரு செயலின் நிகழாமையைக் குறிப்பது எதிர்மறை வினை.

'சென்ற' என்பது உடன்பாட்டுப் பெயரெச்சமும், 'செல்லாத' என்பது எதிர்மறைப் பெயரெச்சமும் ஆகும்.

எதிர்மறைப் பெயரெச்சம் ஒரு பெயர்ச் சொல்லைக் கொள்ளும் போது 'செல்லாத காசு' என்று வரும். இனி, 'செல்லாத காசு' என்னும் தொடரில் உள்ள பெயரெச்சமான 'செல்லாத' என்னும் சொல், அதன் இறுதி எழுத்து மறைந்து, 'செல்லா' என்று நின்று, 'காசு' என்னும் பெயர்ச் சொல்லை இணைத்துக் கொண்டு வரும். இந் நிலையில் 'செல்லா' என்னும் சொல் 'ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்' என்று வழங்கப் பெறும்.

'ஈறு' என்பது இறுதி எழுத்தையும், 'கெட்ட' என்பது மறைந்த அல்லது நீங்கிய நிலையையும் குறிக்கும்.

எனவே, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) விடாக் கண்டன்	எய்தாப் பழி
கொடாக் கையன்	அழியாப் புகழ்
உழாக் கலப்பை	ஏசாச் சிறப்பு
கேளாச் செவி	மூடாக் கண்
வணங்காத் தலை	இணங்காப் பையன்

38. வினையெச்சத்தின் பின் வல்லெழுத்து மிகும்:

'எண்ணி' என்பது வினைச்சொல்.

இது, எண்ணினான், எண்ணினாள் என்பவை போல் நிறைவு பெறாமல், குறைந்து எச்சமாகி நிற்கின்றது.

ஆகவே, முற்றுப் பெறாத இவ் வினையை எச்சவினை எனல் வேண்டும்.

எண்ணி எனும் எச்சம் 'சொன்னான்' என்னும் வினைமுற்றைத் தழுவி, முழுப் பொருளையும் உணர்த்தும். அதே போல் 'துணிக' என்னும் வியங்கோள் வினைமுற்றையும் தழுவி, முழுப் பொருளையும் தரும்.

அதனால், 'எண்ணி' என்பது வினையெச்சம் எனப் பெறும்.

இவ்வாறு வரும் வினையெச்சங்களின் பின் வல்லெழுத்து மிகும்.

(எ-டு) அள்ளிக் கொடுத்தான்	திருப்பிப் பார்
கிள்ளித் தந்தான்	வருவதாகக் கூறினார்
போய்ச் சேர்வான்	நயமாய்க் கண்டித்தார்
தேடித் திரிந்தான்	நயமுறச் சொன்னார்
படித்துப் பார்!	நயம்படப் பேசினார்
இனிக்கப் பேசுகிறான்	எழுப்பிச் சென்றார்

39. வினை முற்றின் பின் வல்லெழுத்து மிகாது:

'பறந்தன' என்பது வினைச் சொல். இதில் எச்சம் இல்லாமல் வினை முற்றுப் பெற்று நிற்றலால், இது வினை முற்றாகும்.

'பறந்தன கிளிகள்' என்னும் தொடரில், கிளிகள் என்னும் வருமொழி நோக்கி, பறந்தன என்பதன் பின் வல்லெழுத்து மிகவில்லை.

இந் நிலை, தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினை முற்று இரண்டிற்கும் பொருந்தும்.

(எ-டு) கண்டனர் கற்றோர் காண்மார் கூட்டத்தார்
என்மனார் புலவர் வந்தது குதிரை
கூறுப சான்றோர் பாய்ந்தன புலிகள்
அழகிது பாவை நல்லன பூக்கள்.

40. எதிர்மறை வினைமுற்றின் பின்னும் வல்லெழுத்து மிகாது:

(எ-டு) வாரா குதிரைகள் நில்லாது செல்வம்.

41. எவ்வகை ஏவல் வினைமுற்றின் பின்னும் வல்லெழுத்து மிகாது:

'பார்' என்பது ஒருவரைப் பார்த்துச் சொல்லும் கட்டளைச் சொல். இஃது ஏவல் வினை எனப்படும்.

ஏவல் வினைமுற்று எடு, கொடு, செல், நில், வா, போ என்பன போல வினைப் பகுதிகளாக இருக்கும்.

அன்றியும், ஒருமையில் ஐ, ஆய், இ மற்றும் ஏ ஆகியவற்றையும், பன்மையில் இர், ஈர் முதலியவற்றையும் வினைமுற்று விகுதிகளாகப் பெற்றும் வரும்.

(எ-டு) எடு பணத்தை! காணுதிர் காட்சியை!
கூறு செய்தியை! உண்பீர் சோற்றை!
கட்டு பார்க்கலாம்! சொல்லாதே போ!
கூறினை சுவைபட! எண்ணுதி தவறுக!
வருவாய் காலையில்! வருதி தனியே!

42. முன்னிலை வினை முற்றின் பின் வல்லெழுத்து மிகாது.

முன்னிலை இடத்துள்ள ஒருவரிடம் கூறும் வினைமுற்றுச் சொல்லின் பின் வல்லெழுத்து மிகாது.

(எ-டு) கூறினை கடிதே கண்டினிர் களிப்புற
நில்லாய் சுவரே சென்றீர் காலையே
வருதி கந்தா.

43. வியங்கோள் வினைமுற்றின் பின் வல்லெழுத்து மிகாது:

வாழ்த்துதல், வைதல், வேண்டிக் கொள்ளுதல், கண்ணியமாக ஏவுதல்—ஆகிய பொருள்களில் வரும் வினைச் சொல் வியங்கோள் வினைமுற்று எனப் பெறும்.

'வெல்' என்னும் முதனிலைச் சொல்லுடன் 'க' என்னும் இறுதிநிலை சேர்ந்து, 'வெல்க' என்று வரும் சொல் வியங்கோள் பொருளைத் தருகின்றது. எனவே 'வெல்க' என்பது வியங்கோள் வினைமுற்று.

'க' என்னும் இறுதி நிலை போலவே, அ, இ, இய, இயர் ஆகியனவும் பிறவும் வியங்கோள் வினைமுற்று இறுதி நிலைகள் (விகுதிகள்) ஆகும்.

இவ்வாறு, வியங்கோள் வினைமுற்றின் பின் வல்லெழுத்து மிகாது.

(எ-டு) செய்க பொருளை! போற்றி பெரும!
வாழி பல்லாண்டு! சொல்லுக சொல்லை!
வாழிய செந்தமிழ்! ஓங்குக தமிழறம்!
வாழியர் பெரிதே! ஒழிக துன்பம்!
ஆழ்க தீயவெல்லாம்! எழுக கடிது!

44. ஏகார இடைச் சொல்லின் பின் வல்லெழுத்து மிகாது:

ஒன்று என்னும் சொல்லோடு 'ஏ' என்னும் எழுத்துச் சேர்ந்து ஒன்றே என நிற்கின்றது.

'ஏ' என்பது ஓர் எழுத்தாக இருந்தாலும், ஒன்று என்னும் சொல்லைத் தெளிவுறுத்தி நிற்பதால், அஃது ஓர் இடைச் சொல்லாகும்.

'ஒன்றே குலம்' என்பதன் இடையில் வல்லெழுத்து மிகவில்லை. இவ்வாறு வரும் இடைச் சொல்லின் பின் வல்லெழுத்துமிகாது.

(எ-டு) யானே கள்வன்! ஒருவனே தேவன்!
பாரியே சிறந்தவன்! எனக்கே பிடிக்கும்!

45. ஓகார இடைச் சொல்லின் பின்னும் வல்லெழுத்து மிகாது:

'நன்று' என்னும் சொல்லோடு 'ஓ' என்னும் ஓர் எழுத்துச் சேர்ந்து 'நன்றோ' என நிற்கிறது.

'ஓ' என்பது எதிர்மறைப் பொருள் குறிப்பதால் இஃது ஓர் இடைச் சொல். எனவே, ஓகார இடைச் சொல்லின் பின்னும் வல்லெழுத்து மிகாது.

(எ-டு) யானோ காவலன் ஏதோ தெரியவில்லை
மேடோ காடோ அதுவன்றோ பிழை. (தொடரும்)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

வர்கள் (410); அடங்கிய வாயுடையவர்களாக இல்லாமல், எப்பொழுதும் சலசல என்று பேசிக் கொண்டே இருப்பார்கள் (419);

எந்த ஒன்றைப் பற்றியும் நன்றாகத் தெரிந்து கொள்ளமாட்டார்கள், இவர்கள்.எதிர்வரும் ஒன்றைப்பற்றி இவர்களால் முன் கூட்டியே அறிய முடியாது. (427); அஞ்ச வேண்டுவதற்குக்கூட அஞ்சாத குருட்டுத் துணிவுடையவர்கள், இவர்கள் (428); எதிர்காலத்தில் வருகின்ற விளைவுகளை இவர்கள் அறியமாட்டாதவர்களாகையால், அவற்றால் வரும் துன்பங்களை இவர்களால் தவிர்த்துக் கொள்ள இயலாது. (429); இவர்கள் அறிவில்லாதவர்களாகையால் என்ன நிலைகளை உடையவர்களாக இருப்பினும், இவர்கள் இல்லாதவர்களைப் போன்றவர்களே ஆவார்கள். (430); இவர்களுடைய நட்பு தேய்பிறையைப் போன்றது (782); அறிவில்லாத தன்மையைத்தான் உலகம் இல்லாமை என்று சொல்லும்; பிற பொருள்கள் இல்லாமையை இல்லாமை என்று சொல்லாது. (841); அறிவில்லாதவர்கள் சில நேரம் பிறர்க்கு மன மகிழ்ச்சியோடு கொடுக்கின்ற கொடையையும், அதைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு வந்து சேர வேண்டிய வரவாகவே கருதிக் கொள்ளவேண்டும் (842). (தொடரும்)

குற்றங்கடிதல்

அதியமான்

குற்றங்கடிதல் என்னும் குணம் அல்லது பண்பு மிக உயர்ந்த பண்பு. குற்றங்கடிதல் என்னும் செயல்பாடு மட்டும் இல்லாதிருந்தால் மாந்த இனமே மிக விரைவில் அழிந்து போகும்; விலங்கிடமும் இக்குணம் உண்டு; எனினும் அதனதன் வலிமையைப் பொறுத்தியங்குகிறது. ஒரு விலங்கு குற்றஞ் செய்யின் அடுத்த விலங்கு குற்றம் இழைத்த விலங்கை உறுமி எச்சரிக்கும். அதற்குப் பின்னும் அக்குற்றம் தொடர்ந்தால், உடனே குற்றஞ் செய்த விலங்கோடு போரிட்டு மாய்க்கும். அல்லது மாய்ந்து போகும். மாந்தர்கள் அறிவுடையவர்கள் என்பதால் குற்றத்தைச் சுட்டி அறிவுரை கூறித் திருத்த முயல்வர். பெரியவர்களைக் கொண்டு எச்சரிப்பர். குற்றத்திலிருந்து திருந்தும்வரை கண்ணோட்டங் காட்டி காத்து நிற்பர். எதற்குமே திருந்தாமல் குற்றத்தைச் செய்து கொண்டே இருந்தால், பெருந்தவறாக முடிந்துவிடும். அவ்வகையில் நடந்துவிடக் கூடாதென்பதற்காகத்தான் நம் தமிழ்ச் சான்றோர் குற்றங்கடிதல் என்ற பண்பால் குற்றங்களைச் சுட்டிக் காட்டித்திருந்திக் கொள்ள நெறிமுறைகளையும் காட்டியுள்ளனர். நெறி முறைகளிலிருந்து தவறுவதைத்தான் குற்றமெனக் கூறுகிறோம்.

குற்றஞ்செய்து அழிந்துவிடாமல் இருக்கவே குற்றங்கடிதல் என்ற ஒரு சிறப்புக் கூறுபாட்டை திருவள்ளுவர் பேராசான் அமைத்துக் கொடுத்துள்ளார். அத்தோடுகூட 34 கூறுபாடுகளில் (அதிகாரத்தை)சிறப்பாக திருவள்ளுவப்பேராசான் காட்டுகிறார். 1. அடக்கமுடைமை, 2 அவாவறுத்தல், 3. அழுக்காறாமை, 4. இன்னாசெய்யாமை, 5. கூடாநட்பு, 6. கூடாவொழுக்கம், 7. கொடுங்கோன்மை, 8. கல்லாமை, 9. கள்ளாமை, 10. கள்ளுண்ணாமை, 11. கொல்லாமை, 12. சிற்றினஞ்சேராமை, 13. சூது, 14. செய்நன்றியறிதல், 15. தீநட்பு, 16 தீவினையச்சம், 17. தெரிந்து செயல்வகை, 18. தெரிந்து தெளிதல், 19. நட்பாராய்தல், 20. நன்றியில் செல்வம், 21. நாணுடைமை, 22. பயனில் சொல்லாமை, 23. பிறனில் விழையாமை, 24. புலான்மறுத்தல், 25. புல்லறிவாண்மை, 26. புறங்கூறாமை, 27. பெண்வழிச்சேரல், 28. பெரியாரைப் பிழையாமை, 29. பேதைமை, 30. மடியின்மை, 31. மானம், 32. வெகுளாமை, 33. வெஃகாமை, 34. வெருவந்த செய்யாமை ஆகிய கூறுகளிலும் குற்றங்கடிகிறார். இவை தவிர குறள் நெறிகளில் பரவலாக ஆங்காங்கே குற்றங்களைச் சுட்டிக் காட்டித் திருந்த வழியுங் கூறுகிறார். மாந்தர்களுடைய வாழ்க்கை இயக்கங்களில் குற்றஞ் செய்யாதவரே இல்லை. அதனால்தான் அக்கால அரசர்களின் காலந்தொட்டு இன்றுவரை அறமன்றங்கள் தேவைப்பட்டன.

குற்றங்கடிதல்: குற்றங்கடிதலை 1. தன்மை, 2. மென்மை, 3. கடுமை, 4. கொடுமை ஆகிய நான்கு வழிகளில் மேற்கொள்ளலாம்; அல்லது ஒறுக்கலாம்.

தன்மை: இது, தான், செய்யுங் குற்றத்தைத் தானே தெளிந்து அல்லது பிறர் சுட்டியபோது கண்டு, தானாகவே திருந்திக் கொள்வதாகும். குற்றங்கடிதலில் இது மிக உயர்ந்த தன்மை; நல்லதுகூட. இவ்வழி திருந்திக்கொண்டால் எவ்வகைத் தொல்லைகளும் வரா. தன் வாழ்க்கைக்கு நன்மையும் பயக்கும் இவன் குமுகாயத்தில் நல்லவனாகக் கருதப்படுவான். குற்றங்களாகக் கருதப்படும், செருக்கு, சினம், சிறுமை, ஈயாமை, மானம்இழத்தல், பேருவகை, பகைமை ஆகிய ஏழு வகையான குற்றங்கள் செய்வதால் வரும் தண்டம் தவிர்க்கப்பட்டு விடும். இத்தகையானவன் அவ்வப்போது தான், செய்யுங் குற்றங்களைக் கண்டு தெளிந்து திருந்திக் கொண்டே வருவதால் இவனுக்குக் குற்றத்தால் வரும் எத் தீங்கும் வருவதற்கில்லை.

மென்மை: சில குற்ற இழைப்புகள் சிறு சிறு கரணியங்களுக்காக நிகழுவன. இக்குற்றங்களுக்குக் கரணியமாக இருப்பனவற்றை ஆய்ந்து பார்த்தால், பிறருக்கு அக்குற்றங்கள் ஒரு பெரும் இழப்பையோ அல்லது துன்பத்தையோ தந்துவிடா. ஒரு தலைவி இல்லத்தை இயக்கும் பொறுப்புகளை மறந்து விடுதல். காட்டாக உண்வுப் பொருள்களைப் பாதுகாக்க மறந்ததால் அவற்றை மீண்டும் பயன்படுத்த இயலாதபடி சிதைவுறுதல் அல்லது அழிவுறுதல், குடும்பத்திற்குக் காலா காலத்தில் உணவு அணியஞ் செய்யாததால் வேலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படல், ஒரு தலைவன் குடும்பத்திற்கு வேண்டிய வேண்டியவற்றைக் காலா காலத்தில் வாங்கி வைக்காமை, பிள்ளைகள் தீநட்பால் பள்ளிக்குச் செல்லாது ஓரிரு நாள்கள் ஏமாற்றுதல், ஊரிலுள்ள சிற்சில கட்டுப்பாடுகளை மறந்துவிடுதல் இவை போன்ற சிறுசிறு தவறுகளை மென்மையாகப் பேசி அறிவுரை கூறித் திருத்துதல் என்பன ஒருவகை. ஆனால் அறிவுரையை ஏற்றுக் குற்றஞ் செய்தாலோ, மேலும் அக்குற்றங்கள் நடவாதபடி தன்னைத் திருத்திக் கொள்ளாமல், மேலும் குற்றஞ் செய்யின் வரும் பின் விளைவுகளை ஆராயாமலோ, மென்மையாகத்தானே குற்றங்கடிதல் நிகழ்த்தப் பட்டது என மீண்டும் அக்குற்றத்தைச் செய்யத் துணிந்தாலோ, பிற தீயவிளைவு கடுமையாகிவிடும்

மென்மை வழியில் குற்றங்கடிந்தும் அக்குற்றத்தால் அடுத்து வரும் துன்பம் பற்றி உன்னிப் பார்க்காமல், மீண்டும் குற்றச் செயல்கள் நிகழ்ந்தால் அக்குற்றம் வளர்ந்து பெருங்குற்றஞ் செய்யத் தூண்டல் ஏற்படும். அஃது அழிவு வழிக்கேகூட இடங்கொடுத்துவிடும். அதனாலேயே நம் இன நலப் பேராசான், "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக்கெடும்." (குஃ௩௫) -என அறிவு புகட்டி எச்சரிக்கிறார். உண்மைதானே. பின் விளைவு என்ன நிகழுமென சிந்திக்காமல் குற்றச் செயல்பாடுகள் நிகழ்ந்தால் பேராசானின் கூற்றுப்படி தீ முன் வைத்த பஞ்சு போல அழிவு வரும். எனவே மென்மை வழிக் குற்றங் கடிவோரை மதித்து அவர் கூறும் அறிவுரையை மனத்தில் ஏற்றிக் குற்ற நிகழ்வுகளைச் செய்யாதுவிடல் வேண்டும்.

கடுமை: குற்றங்கடிதலில் கடுமை வழியானது பகுத்தறிவு குறைவுடையவர்களுக்குக் கொடுக்கும் மருந்து. அறுவை மருத்துவம் போன்றது. செய்த குற்றமும் பிறருக்குப் பெரும் தீங்கையும் இழப்புகளையும் கொடுத்திருக்கும். அவ்விழப்பை எண்ணிச் சினங் கொள்ளுதலும், குற்றமே-அடக்கமற்ற சினமே கடுமைத் தண்டத்தைப் பெற இழைக்கும் குற்றமாகவும் மாறும். திருடியவனைப் பிடித்துக் குற்றக் கூண்டில் நிறுத்தித் தண்டம் பெறவைப்பதற்குப் பகரமாக (பதிலாக) அடக்கமற்ற சினம் பொங்க அவனை அடித்துக் காயமுறச் செய்து, தானே குற்றக் கூண்டில் நிற்பது திருடியவன் பெறவேண்டிய கடுமையான தண்டத்தைக் குற்றங் கடிந்தவன் பெறும் நிலை ஏற்பட்டுவிடும்.

"இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று—(கு. ௩0அ)

மிகுதியான குற்றமான நெருப்பில் தோய்வதான குற்றத்தை தனக்கொருவன் செய்யினும், அவன் மீது சினங்கொள்ளாதிருத்தல் நன்று. குற்றம் இழைத்தவன் பெறவேண்டிய தண்டத்தைக் குற்றங் கடிந்தவன் பெறவேண்டும் நிலை ஏற்பட்டுவிடும். அதனாலேயே பாவலரேறு அவர்கள் "குற்றவாளியைத் திருத்துகின்ற நடைமுறை எதுவோ, அதுவே தண்டனையாக இருத்தல் வேண்டும்; பிறவெல்லாம் அவனை ஊக்குவிப்பனவே" (த.நி. சிந்தனைக்கு: 44) என அறிவுரை கூறுகிறார். இழைக்கப்பட்ட குற்றம் கடுமைத் தண்டம் பெறவேண்டும் நிலை இருப்பினும், அதனைக் கொடுக்க வேண்டியவர்களே கொடுக்கவேண்டும். அஃதாவது அரசை வழங்க விடுவதுதான் நெறியாகும். குற்றத்தின் கடுமைக்குத் தகுந்தவாறு தண்டமும் கடுமையாக இருக்கவேண்டும். காட்டாக, பல ஆண்டுகள் சிறை இருப்பாக இருத்தல் நல்லது. அல்லது தண்டப்பணங் கட்டவோ அல்லது இரண்டும் சேர்த்தோ தண்டனை வழங்கலாம்.

கொடுமை: குற்றங்கடிதலில் கொடுமைத் தண்டம், கொடுமைக் குற்றம் இழைத்தவர்க்கு வழங்கப்பட வேண்டியது கடமையாகிறது. உயிர்க்கொலை செய்பவர்களுக்கே இஃது ஏற்றது. இதனை நன்காய்ந்து குற்றங்கடியுமுன் குற்றத்தையும் இழைத்தவனையும் உண்மையென உறுதி செய்து கொள்ளவேண்டும். இதில் குற்றமற்றான் சிக்கிவிடக் கூடாது. போர்க்களத்தில் நிகழும் வீரர் கொலை கலையாகக் கருதப்படும். ஊரகத்தில் கொலை நடந்தாலே குற்றமாகும். மாந்தர்களின் உறுப்புகளை இழக்கச் செய்வது, கொலை செய்து உயிரையே போக்கி விடுதல் போன்ற குற்றங்களுக்குக் கொடுமையான தண்டத்தைக் கட்டாயம் வழங்க வேண்டும். அல்லாக்கால் கொடுஞ் செயல்கள் நடந்து கொண்டே வளரும். அங்ஙனம் வளரவிடின் சிறுசிறு குற்றங்களும் கடிதல் இல்லாக் கரணியத்தால் பெருங் குற்றஞ் செய்யவும் ஏதுவாகிவிடும். குற்றங்கடிதலிலே குற்றம் ஏற்பட்டுவிட்டால் குற்றத்தை இழைத்தவனே அதிலிருந்து தப்பிக்கப் பயிற்சிப் பெற்றுக் குற்றத்-

ளைதச் செய்துவிட்டு அதினின்றும் தப்பித்துக் கொள்வான். இந் நிலை நாட்டுக்குக் கேடானது. இதனால் பொது ஒழுக்கமும் அற-நெறி வழிகளும் இல்லாமல் போய்விடும். கொடுமையான குற்றத்தை ஒரு நாட்டுத் தலைவன் செய்தாலும் தண்டத்தை வழங்கியே ஆகவேண்டும். அதுவே நேர்மை. அது மட்டுமன்று குமுகாயத்தில் நடக்கும் குற்ற அச்சம் ஏற்பட வேராகும். நேர்மை தவறின் மக்களும் குற்றத்தைச் செய்யத் துணிந்து செயல்படு-வார்கள். இதனை உணர்ந்து தமிழ் நெறி புரண்டுவிடாமல் இருக்-கப் பாண்டியன் நெடுஞ்செழியன் கோவலனை முறையற்ற நெறி-யில், நுண்ணாய்வுக் குறைவால் கொலை செய்வித்த குற்றத்திற்-காக அவனை அவன் மாய்த்துக் கொண்டான். இஃதே ஒரு நாட்டை ஆளும் தலைவனுக்கு இருக்கவேண்டிய சிறந்த நெறி முறைப் பண்பு. இப்பண்பு தலைவர்களுக்கு இருந்தால்தான் குடிமக்களும் குற்றமிழைக்க அஞ்சுவர். குற்றங்களும் குறையும். கொடுமைத் தண்டம் வழங்குவதிலும் கண்ணோட்டமும் வேண்டு-மென்பார் பேராசான். ''ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங் கண்ணோடிப் பொறுத்தாற்றும் பண்பே தலை.'' (கு: ௫௭௯) தன் குற்றத்திற்குத் தன்னையே ஒறுக்கும் இயல்புடையார் பிறர் குற்றத்தைப் பொறுக்கும் குணமும் உடையவராய் இருப்பர். இக்குணம் அரசனுக்குத் தலையாய இயல்பாகக் கூறப் பெறுகிறது. கொடுமைத்தண்டம் கொலை செய்தவருக்குச் சாவுத்தண்டம் (death) கொடுத்தல் கொலைக் குற்றம் நீக்க எச்சரிக்கைத் தண்ட-மாகும். ஆனாலும் அருள் என்ற இரக்கக் குணத்தையும் செயல் படுத்தவேண்டுமே. அதனால் குற்றம் செய்தவரிடமும் சிறிது அருள் காட்டல் வேண்டுவதேயாகும். எனவே தான் மேற்முறை-யீடு என்ற கண்ணோட்டம் நிகழ்கிறது. கொலை செய்வதற்குக் கட்டாயம் ஒரு கரணியம் இருக்கும். கொலை செய்தவனுக்கு கொலையுண்டவன் யாதாகினும் கொடுங்கேட்டைச் செய்திருப்-பான். அதிகப் பொறுக்க இயலாமல் உணர்ச்சியின் தூண்டலால் கொலையைச் செய்து முடித்திருப்பான். கொலைக்குத் தகுந்த கரணியம் கட்டாயம் இருக்கும் என்பதாலேயே கண்ணோட்டம் தேவைப்படுகிறது. சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னி அரசனை ஊன் பொதிப் பசுங்குடையார் என்ற புலவர் பாடுகிறார்:

''நீ மெய்கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக ஒறுத்தி
வந்து அடிபொருந்தி முந்தை நிற்பின்
தண்டமும் தணிதி (புறம் ௧0)

அஃதாவது ஒருவனுடையக் குற்றத்தை ஆய்ந்து அது மெய்யெனக் கண்டபோதும் அவன் வந்து குற்றம் உணர்ந்து நின்றால் தண்ட-மும் தணியும் என்பார் அப்புலவர். எனவே கொடுமைத் தண்-டத்தை நிறைவேற்றுங்கால் கண்ணோட்டம் காட்டுவது சிறப்-புடையதே; ஏனென்றால் குற்றத்தின் தன்மையைக் குற்றத்தை நிகழ்த்தியவன் உணர்ந்துவிட்டால், அவன் திருந்துவதற்கு அணியமாகிறான் (தயாராகிறான்); ஆதலால் கண்ணோட்டம்

விநோபாவின் கல்வி ஆர்வம்!

நிலக்கொடை இயக்கம், பூமிதான இயக்கம் சிற்றூர்ப்புறத் தொழில் அமைப்பு, உழைப்புக் கொடை (சிரம தானம்) ஆகியவற்றில் முழு உழைப்பையும் வாழ்க்கையையும் ஈடுபடுத்தியவர் விநோபா அடிகள்.

. மெய்ம்மை, அன்பு, இன்னா செய்யாமை ஆகியவற்றை அடிப்படைக் கொள்கைகளாகக் கொண்டு வாழ்ந்து காட்டியவர் அவர். அவருடைய கல்வி கற்கும் ஆர்வம் பெரிதும் மதிக்கவும், நம் இளைஞர்களால் பின்பற்றவும் தக்கது.

அவருடைய தாய்மொழி மராத்தி. இருப்பினும் அவர் கற்ற மொழிகள் பல. அவருக்கு சமசுக்கிருதம், பாரசீகம், இந்தி, உருது, அரபி, ஆங்கிலம், குசராத்தி, பஞ்சாபி, ஒரியா, வங்காளம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் தெரியும்.

நடைச் செலவாக அவர் இந்தியா முழுவதும் சென்ற பொழுது, மக்களிடம் அவரவர் மொழிகளின் வாயிலாகவே அவர் பேசினார். பிற மொழிகளையும், மதங்களையும் நன்கு மதித்தார்.

இவற்றுடன், தம்மைச் சுற்றியுள்ள முசுலிம்களை நன்கு புரிந்து கொள்வதற்காகக் குர்-ஆன் படிக்க விரும்பினார். மொழி பெயர்ப்பைப் படித்தால் சரியான பொருள் தெரியவராது என்று கருதிக் குர்-ஆனைச் சரியாகப் படிப்பதற்காகவே தமது நாற்பத்தாறாவது அகவையில் அரபி மொழியைக் கற்றார். குர்-ஆனை நன்கு புரிந்து கொண்டதனால், 'திருக் குர்-ஆனின் சாரம்' என்ற ஒரு நூலை ஆங்கிலத்தில் அவரால் எழுத முடிந்தது.

மாணவராக இருக்கும்போது கணிதம் அவருக்கு அதிகமாகப் பிடிக்கும். பள்ளியிலும், கல்லூரியிலும் அவருக்குத் தெரிந்த அளவில் காலத்தை வீணாக்கியதே இல்லை. படிக்கும் போது தமக்குப் பிடித்த பகுதிகளையெல்லாம் அவர் மனனம் செய்து விடுவார்.

காந்தியடிகளுடன் சமர்பதி பாழியில் (ஆசிரமத்தில்) இருந்த பொழுது பாழியின் நெறிமுறைகளை உறுதியுடன் கடைப்பிடித்தார். அங்கிருந்த பொழுது, ஓராண்டுக் காலத்தில் உபநிடதங்கள், கீதை, பதஞ்சலியோகம், பிரமசூத்திரம், சங்கரபாடியம் ஆகியவற்றைக் கற்றார். இதே வேளையில் ஆறு நண்பர்களுக்குக் கீதையையும், இருவருக்கு உபநிடதங்களையும், மற்ற இருவருக்கு ஆங்கிலத்தையும் பலருக்கு வடமொழியை (சமசுக்கிருதத்தை)யும் கற்பித்தார். பாடம் படித்தவர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்தனர். அந்த நான்கு இடங்களுக்கும் நடந்தே செல்லுவார்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

காட்டுவது தவறில்லை. ஏனென்றால் தண்டம் குற்றஞ் செய்தவனை திருத்துவதற்காகவே அமைதல் வேண்டும்.

எனவே குற்றங் கடிதலைக் குற்றமெனக் கொண்டால் குற்றங்கள் குறையா. அதனால்தான் குற்றங்கடிதல் என்ற ஒரு நூற்கூறுபாட்டை (அதிகாரத்தை) அமைத்துத் தமிழர்களுக்கு பேராசான் வள்ளுவர் வழங்கியுள்ளார். O

இவ்வாறு ஓராண்டில் 400 கற்கள் (Miles) தொலைவு நடந்துள்ளார். அத்துடன் இத்தனையும் இலவயமாக நடத்தப்பட்ட வகுப்புகள்.

விநோபா அடிகளிடமிருந்து மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய, பின்பற்ற வேண்டிய அரிய பண்புகளுள் ஒன்று, அவர் சொன்ன சொற்களைக் காக்கின்ற பண்பாகும். அதற்கு ஓர் எடுத்துக்காட்டான நிகழ்ச்சி பின் வருமாறு:

காந்தியடிகளின் பாழியில் அவர் இருந்த பொழுது, தம் இயக்கப்பணித் தொடர்பாக, நடைச் செலவு செய்ய முற்பட்ட பொழுது, காந்தியிடம் அதற்கு இசைவு கேட்கையில், ''சரியாக ஓராண்டில் மீண்டும் பாழிக்கே திரும்பிவருவேன்'' என்று சொல்லிச் சென்றார். அவ்வாறு கூறிய படியே அடுத்த ஆண்டு அதே குறிப்பிட்ட நாளில் அவர் பாழிக்குத் திரும்பினார். அவர் அன்று வரவேண்டிய நாள் என்பது காந்தியடிகளுக்கு, விநோபா வந்த பிறகுதான் நினைவிற்கு வந்தது. அவ்வாறு அவர் வந்து சேர்ந்த நேரமும்கூட கடந்த ஆண்டு அவர் புறப்பட்டுச் சென்ற நேரத்திற்கு மிக ஒத்திருந்தது மிகவும் வியப்புக்குரியது. இதையறிந்த காந்தியடிகள் விநோபாவின் வாய்மையைப் பற்றி மிகவும் வியந்தார். அதனால்தான், ''பொதுவான உடலில் வாழும் சிறப்பான உயிர்'' என்று அவரைக் குறிப்பிடுகிறார் காந்தியடிகள்.

—பேராசிரியர் ம. பெரோசு.

இதழ். சர்வோதயம் திசம் '89, சன: '90

உலக நாணயங்கள்

நாடு	நாணயம் (அடிப்படை)	உருபா மதிப்பு (தோரா)
அமெரிக்கா	1 தாலர்	13.50
சிங்கப்பூர்	,,	4.78
மலேசியா	,,	4.34
இலங்கை	1 உருபா	0.45
பாக்கித்தான்	1 உருபா	0.78
குவைத்து	1 தினார்	34.13
பஃறைன்	1 தினார்	26.46
ஈரான்	100 ரியால்	11.68
ஆங்காங்	1 தாலர்	1.42
பிரான்சு	1 பிராங்க்	1.34 (?)
இந்தோனேசியா	100 ருபியா	1.02
பங்களாதேசம்	100 டாகா	41.13
இத்தாலி	100 லிரா	0.68
சப்பான்	100 யென்	4.27
எகிப்து	1 பவுண்டு	11.99
அரேபியா (யூ.எ.இ.)	1 திர்கம்	2.77
உருசியா	1 ரூபிள்	13.78
சுவீடன்	1 குரோனர்	1.33
நெதர்லாந்து	1 கில்டர்	2.59
இசுப்பெயின்	100 பெசிடா	7.27

எண்ணெய் வகைகள்!

எண்ணெய் வகைகள் குருதியிலுள்ள கொழுப்பைக் (கொலசுட்ராலைக்) குறைக்கவும் செய்கின்றன; மிகுக்கவும் செய்கின்றன.

தேங்காய்நெய், பனைநெய் (Palm oil) வெண்ணெய், நெய் போன்றவை குருதிக்கொழுப்பினை அதிகரிக்கச் செய்கின்றன. ஆனால், சிலர் உடல் நிலைக்கேற்ப, அதிகரிக்கச் செய்யாவிட்டாலும், இவை குருதிக் கொழுப்பைக் குறைக்கும் ஆற்றல் பெற்றவை அல்ல.

ஆனால் சூரியகாந்தி நெய், சபோலா நெய், சோயாமொச்சை நெய், அரிசித்தவிடு நெய், நல்லெண்ணெய் ஆகியவை குருதிக் கொழுப்பின் அளவைக் குறைக்கும் ஆற்றல் பெற்றவை.

ஒவ்வொரு நெய்க்கும் தனித்தனித் தன்மைகள் இருக்கின்றன. இந்த நெய்தான் சிறந்தது என்று கூற முடியாது. நம் நாட்டில் நீண்ட நெடுங்காலமாகப் பயன்படுத்தி வரும் நல்லெண்ணெய் பெரும்பாலும் நன்மை பயப்பதாக உள்ளது.

எள்ளிலிருந்து பிழியப்பெறும் இந்த நல்லெண்ணெய் நீண்ட நாள்களுக்குச் சேமித்து வைத்தாலும் கெடாது. இது குருதிக் கொழுப்பையும் குறைக்கக் கூடியது. மற்ற நெய்களைக் காட்டிலும் எளிதில் செரிக்கக் கூடியது. உணவிலுள்ள சுண்ணாம்பு, கந்தகம் இரண்டும் செரிமானமாகி உடலில் சேர நல்லெண்ணெய் உதவுகிறது. இவ்வளவு நன்மை செய்வதால்தான் இந்த எண்ணெயை நம் முன்னோர்கள் 'நல்ல' எண்ணெய் என்று பெயரிட்டிருக்கிறார்களோ?

நிலக்கடலையிலிருந்து எடுக்கப் பெறும் கடலைநெய் பூசனம் பூத்துக் கெட்டுப் போகக் கூடியது, அதனால் நீண்ட நாள்களுக்கு இந்த நெய்யைச் சேமித்து வைத்தால் இது கெட்டுப் போகும். மேலும் கெட்டுப் போன கடலையை ஆட்டி, அதிலிருந்து நெய் பிழியப்பெற்றாலும், அதில் நச்சு சேர்ந்துவிடும். ஆனால் தூய்மை செய்யப் பெற்றதாக இருந்தால், அது தூய்மையாகவே இருக்கும்.

நெய்கள் கெட்டுபோவதற்குக் காரணம் தண்ணீர். அஃதாவது ஈரப்பசை உள்ள நெய்தான் விரைவில் கெட்டுப்போகும். பொதுவாக நெய்யைக் காற்றுப் புகாத தண்ணீர் கலக்காத, கதிரவன் வெளிச்சம் படாத இடத்தில் சேமித்து வைத்தால் அது நீண்ட காலம் கெட்டுப் போகாமல் இருக்கும்.

நெய்களைத் திரும்பத் திரும்பச் சூடு படுத்திப் பயன்படுத்துவது ஒரு வழக்கமாகி விட்டது. சூடு படுத்தும் போது அவற்றில் சில வேதியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சில நெய்களை இம் மாதிரி திரும்பத் திரும்பச் சூடுபடுத்துவதால், அவற்றில் புற்றுநோய் ஏற்படுத்தவல்ல வேதியங்கள் உண்டாகின்றன—என்று கண்டறிந்துள்ளனர். தேங்காய் நெய்யிலும், பனைநெய்யிலும் மட்டுந்தான் இக் குறைபாடு நேர்வதில்லை. சூரியகாந்தி நெய்யையும்

வல்லினம் மிகுதலும், மிகாமையும்:

புலவர் இறைக்குருவனார்

29. எது, எவை, ஏது, யாது, யாவை, என்னும் வினாப் பெயர்களின் முன்னும், ஆ, ஓ, ஏ, என்னும் எழுத்துக்களை இறுதியாகக் கொண்ட வினாப் பெயர்களின் முன்னும் வல்லெழுத்து மிகாது.

'என்ன செய்தி'—என்னும் தொடரில் என்ன என்னும் வினாப்பெயர், செய்தி என்னும் தொழிற்பெயரால் தொடரப் பெற்றுள்ளது.

இவ்வாறு வினாச் சொல்லை அடுத்து வரும் சொல்லுக் கிடையில் வல்லினம் மிகாது.

(எ-டு) எது கனிந்தது?
எவை சிறந்தன?
ஏது காசு?
யாது கூறினார்?
யாவை பெரியவை?
என்ன சொன்னார்?
என்று சொன்னான்?
எத்தனை பழங்கள்?
எவ்வளவு கிட்டும்?
எவ்வாறு தீர்ப்பது?
வானொலியா கேட்டான்?
காட்சியா பார்த்தான்?
கதையே கேட்டனை!

30. 'எ' என்னும் வினா எழுத்தின் முன்னும், எந்த, எங்கு, யாண்டு, யாங்கு, எத்துணை, எப்படி, எற்றை, எவ்வகை, யா—என்னும் வினாப் பெயர்களின் முன்னும் வல்லெழுத்து மிகும்.

யாண்டு என்பது 'எங்கே' என்று பொருள்படும் வினாப் பெயர்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் மீண்டும் சூடுபடுத்திப் பயன்படுத்துவது நல்லதன்று. ஒருமுறை அல்லது இருமுறை சூடுபடுத்திப் பயன்படுத்தலாம். அதன் பிறகு அந்த நெய்யைத் தாளிக்கப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் நெய் வீணாகாது.

—நன்றி—ஆனிமன் பிப் : 90.

(குறிப்பு: ஒரு பொருளிலிருந்து பிழியப்பெறும் பசை நீர்மத்தை நெய் என்றுதான் சொல்லவேண்டும்; எண்ணெய் என்று சொல்லக்கூடாது. எள்ளிலிருந்து பிழியப்படும் நெய்யைத்தான் எள்+நெய்—எண்ணெய் என்று சொல்லவேண்டும். தேங்காயிலிருந்து எடுக்கப் பெறுவது தேங்காய்நெய்; கடலையிலிருந்து எடுக்கப் பெறுவது கடலைநெய். பாலிலிருந்து கிடைப்பதை ஆநெய் என்று கூறுதல் வேண்டும். ஆ-பசு. பசு வட சொல். ஆ, ஆன், ஆவு-என்பவையே தூய தமிழ்ச் சொற்கள். எனவே பசுநெய்யைப் பிரித்துச் சொல்வதானால் ஆநெய், ஆன்+நெய்—ஆனெய்; ஆவு×நெய்—ஆவுநெய் என்று சொல்லுவதே முறை ஆனால் வெறுமனே நெய் என்று சொன்னாலேயே ஆவின் நெய்யைத்தான் குறிக்கும்—என்பவற்றை மனத்தில் கொள்க.)

(அட்டை [illegible]-ஆம் பக்கத் தொடர்ச்சி)

- சீரிய எண்ணங்களைச் செயல்படுத்தும் போது அவை சிறந்த செயல்களாகின்றன.
- உள்ளத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அமைதி நிலவுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு இன்பம் மேலிடுகிறது; அமைதி குறையக் குறையத் துன்பம் வளர்கிறது.
- நீண்ட தூரம் ஓடிவந்தால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்.
- நமக்குக் கிடைக்காத பொருள் இல்லாமல் நாம் வாழக் கற்றால், விரும்புகிற பொருள் எல்லாம் கிடைக்கும்.
- அறிவின் பெருமை, அது செயல்கள் மூலம் ஒளிவிடும் போது-தான் மற்றவர்களுக்குப் புலப்படும்.
- அமைவாகத்தான் சிந்திக்கவேண்டும். ஆனால் விரைவாகச் செயல்படவேண்டும்.
- உழைத்துச் சம்பாதித்த பொருளுக்கு எப்போதுமே மதிப்பு மிகுதி.
- சுவையை மட்டும் கருதி வயிற்றை நிரப்புவதனால்தான் செல்வர்கள் பல நோய்களுக்கு ஆளாகிறார்கள். பணக்காரர்-கள் ஏழையைப் போல உண்ணவேண்டும்.
- சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்; அது உள்ளத்தின் இசை; சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்; அது ஆற்றலின் பிறப்-பிடம்; விளையாட நேரம் ஒதுக்குங்கள்; அது இளமைக்கு உரம்! படிக்க நேரம் ஒதுக்குங்கள்; அது அறிவின் ஊற்று. நட்புக்கு நேரம் ஒதுக்குங்கள்; அது மகிழ்ச்சிக்கு வழி. உழைக்க நேரம் ஒதுக்குங்கள்; அது வெற்றியின் விலை.
- வாழ்க்கை எனக்குக் கற்பித்த பாடங்களில் ஒன்று; இடுப்-புக்கு வேட்டி, மேலுக்குச் சட்டை, என்பது போல, முகத்-துக்குப் புன்னகை.
- கொடுத்ததை மறப்பதும், பெற்றதை நினைப்பதுமே நட்புக்கு அழகு.
- நடந்தால் நாடெல்லாம் உறவு; படுத்தால் பாயும் பகை.
- நன்றாகப் பேசுவது நல்லதுதான்; ஆனால் நன்றாகச் செய்வது அதனினும் நல்லது.
- மறுப்பதற்காகவோ குழப்புவதற்காகவோ படிக்காதே; நம்புவதற்காகவோ தலையாட்டுவதற்காகவோ படிக்காதே; சீர்தூக்கிப் பார்க்கவும் சிந்திப்பதற்குமே படி, படி, படி.
- எதற்கும் அஞ்சாதே, எதையும் வெறுக்காதே, யாரையும் ஒதுக்காதே. உன்பணியை ஊக்கமுடன் செய்.
- சுறுசுறுப்போடு இயங்கும் போதுதான் மாந்தன் ஒளிர்கிறான்.
- மாபெரும் ஈகங்கள் மூலமாக மட்டுமே மாபெரும் செயல்களை முடிக்க இயலும்.
- சிக்கனத்தைக் கடைப்பிடிக்காத எவருமே, செல்வராக முடியாது. சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எவரும் ஏழை-யாக இருக்க முடியாது.
- பாராட்டுங்கள்; யாருக்கும் பாராட்டுப் பிடிக்கும். உங்களை-யும் திருப்பிப் பாராட்டுவார்கள். மதிப்புக் கொடுங்கள்; திருப்பி மதிப்பு வழங்குவார்கள். உதவுங்கள்; வெற்றிக்கு முதல் படி அது.
- கொள்கை இல்லாத அரசியல், உழைப்பு இல்லாத செல்வம், நேர்மை இல்லாத வணிகம், ஒழுக்கம் இல்லாத கல்வி, மனச்-சான்று இல்லாத மகிழ்ச்சி, மாந்தத்தன்மை இல்லாத

அறிவியல், ஈகம் இல்லாத வழிபாடு, இவை ஏழும் விலக்கப்பட வேண்டும்.

- வாழ்க்கையில் ஒரு பிடிப்பையும் சுவையையும் ஊக்கத்தையும் அளிப்பது புகழ் ஒன்றுதான்.
- உழைப்பு வறுமையை மட்டும் விரட்டவில்லை, தீமையையும் விரட்டுகிறது.
- எதுவும் அழகாக இருப்பதற்கு அ்து ஒழுங்காக இருப்பது தேவை.
- செயல் படுவதானால் உறுதியோடு செயல்படுங்கள்; நீங்கள் விட்டுக் கொடுப்பதானால், பெருந்தன்மையோடு விட்டுக் கொடுங்கள்.
- மனமே! பதற்றமடையாதே! மெல்ல மெல்லத்தான் எல்லாம் நடக்கும். தோட்டக்காரன் நூறுகுடம் நீர் ஊற்றினாலும் பருவம் வந்தால்தான் பழம் பழுக்கும்.
- தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் மாந்தன் பேசுவானாகில் உலகில் முழு அமைதி நிலவும்.
- மகிழ்ச்சி, அளவான உணவு, போதிய ஓய்வு ஆகியவை மருத்துவரை வீட்டுக்குள் வரவிடமாட்டா.
- உடல்நலம் உள்ளவனுக்கு நம்பிக்கை இருக்கும்; நம்பிக்கையுள்ளவனுக்கு எல்லாம் இருக்கும்.
- நோய்வராமல் தடுப்பவன் அறிஞன்; வந்து தடுப்பவன் மாந்தன்; வந்தும் தடுக்காதவன் பிணம்!
- பொதுமக்களின் கருத்தைக் கண்டு மெலியவர்கள் நடுங்குகிறார்கள்; முட்டாள்கள் அத்துடன் மோதுகிறார்கள்; அறிவாளிகள் அதை உருவாக்குகிறார்கள்.
- எவன் பிறரது நற்செயல்களைக் கண்டு மகிழ்ச்சி கொள்வதில்லையோ, அவனால் நற்செயல்கள் எதுவும் செய்ய முடியாது.
- நல்லவற்றைக் கூட்டிக்கொள்; தீயவற்றைக் கழித்துக் கொள்; அன்பைப் பெருக்கிக் கொள். வாழ்க்கையை வகுத்துக் கொள்.
- செயலை விதையுங்கள்; பழக்கம் உருவாகும்; பழக்கத்தை விதையுங்கள்; குணம் உருவாகும்; குணத்தை விதையுங்கள்; உங்கள் எதிர்காலம் உருவாகும்!
- நேர்மையை அறிந்தவன் உயர்ந்தவன்; நேர்மையை விரும்புகிறவன் அதைவிட உயர்ந்தவன். நேர்மையைக் கடைப்பிடித்து அதிலே மகிழ்ச்சி காண்பவன் தலை சிறந்தவன்.
- எவ்வளவுதான் மறைத்து வைத்தாலும் எல்லோருடைய நெஞ்சிலும் புகழ் ஆசை எப்பொழுதும் ஆட்சி செய்து கொண்டே இருக்கிறது.
- நன்றாகச் சிந்தனை செய்தல் அறிவாகும்; நன்றாகத் திட்டமிடல் மிகுந்த அறிவாகும். நன்றாகச் செய்து முடிப்பது எல்லாவற்றிலும் சிறந்த அறிவாகும்.
- பணம், ஆற்றல், திறமை இவையெல்லாம் வாழ்க்கைக்குரிய பொருள்களேயன்றி அவையே வாழ்க்கை ஆகா.
- வெற்றியின் கமுக்கம் எடுத்த செயலில் நிலையாக நிற்பதே.

(தொகுப்பு: முனைவர் மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)